Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 258

செவ்வாய்க்கிழமை
12 ஒகஸ்ட் 2025

ஆடி 27 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

யாழ்ப்பாணத்தில்

## நேற்று கனமழை 32 பேர் பாதிப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 12
யாழ்ப்பாணத்தில் நேற்றுக் காலை பெய்த கனமழை காரணமாக, 7 குடும்பங்களைச் சேர்ந்த 32 பேர் பாதிக்கப்பட்டுள்ளனரென யாழ்ப்பாணம் மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார். 11

மன்னாரில் காற்றாலைக்கு எதிராக

# வடக்கு – கிழக்கை ஒன்றுதிரட்டி நாளைமறுதினம் பெரும் போர்!

**மன்னார், ஒகஸ்ட் 12**

**மன்னாரில், இரண்டாம்கட்ட காற்றாலைக் கோபுரங்கள் அமைப்பதற்கு எதிராகவும், கனிம அகழ்வுக்கு எதிராகவும் வடக்கு - கிழக்கு ரீதியாக மக்களைத் திரட்டி நாளைமறுதினம் வியாழக்கிழமை பெரும் போராட்டம் இடம்பெறும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.** 11

## ரியூஷன் கிணற்றில் மாணவியின் சடலம்

வவுனியாவில் சோகம்



வவுனியா, ஓக. 12
வவுனியாவில் தனியார் கல்வி நிலைய கிணற்றுக்குள் இருந்து மாணவியொருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். வவுனியா - சிதம்பரநகரைச் சேர்ந்த அருணிகா (வயது -18) என்ற மாணவியே 11

சமையலின்போது

## பற்றியது தீ; மூதாட்டி பலி

யாழ்ப்பாணம், ஓக. 12
சமையலின்போது தீக்காயங்களுக்கு உள்ளான மூதாட்டியொருவர், மேலதிக சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்தார். 11

## அல்லாரையில் விபத்து முதியவர் உயிரிழப்பு!



யாழ்ப்பாணம், ஓக. 12
மீசாலை - அல்லாரை கிழக்குப் பகுதியில், மோட்டார்சைக்கிளும் சைக்களும் மோதி விபத்துக்கு உள்ளானதில் முதியவர் ஒருவர் உயிரிழந்துள் 11

## போதைமாத்திரைகளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 12
யாழ்ப்பாணம் ஆனைக் கோட்டைப் பகுதியில் போதை மாத்திரைகளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் 11

## 280 கிலோ கஞ்சாவுடன் இருவர் நேற்றுக் கைது!

போதை வியாபாரிகள் எனத் தகவல்

யாழ்ப்பாணம், ஓக. 12
யாழ்ப்பாணம் சாவகச்சேரி பகுதியில் வைத்து, 280 கிலோ கஞ்சாவுடன் போதைப்பொருள் வியாபாரிகள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
சாவகச்சேரி தனன்களப்புப் பகுதியில், சந்தேகத்துக்கு 11



## மண்கும்பான் கடற்பகுதியில் ஆணொருவரின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஓக. 12
ஊர்காவற்றுறை - மண்கும்பான் கடற்கரைப் பகுதியில் ஆணொருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
சடலமொன்று மிதப்பதாக 11

உதயனின் ஊடக அனுசரணையில்

## ஒகஸ்ட் 15ஆம் திகதியன்று சர்வதேச புத்தகத் திருவிழா

திருவள்ளுவர் கலாசார மையத்தில் அனைத்து ஏற்பாடுகளும் முழுமை

யாழ்ப்பாணம், ஓக. 12
உதயனின் ஊடக அனுசரணையில், யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்துறை மன்றத்தின் ஒழுங்கமைப்பில், 'யாழ்ப்பாணம் சர்வதேச புத்தகத் திருவிழா' எதிர்வரும் 15ஆம் திகதி தொடக்கம் 17ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.
யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில், கண்காட்சிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பிரத்தியேக 11



முச்சந்தி முரளி

'எல்லாப் பக்கமும் போராட்டங்களுக்கு குறைவில்லை ஆனால் ஒன்டுக்கும் முடிவில்லை கண்டியளோ'

## வயோதிபப் பெண் வெட்டிக் கொலை

கிளிநொச்சியில் கோரம்

கிளிநொச்சி, ஓக. 12
கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஊற்றுப்புலம் பகுதியில், வயோதிபப் பெண்ணொருவர் நேற்று மாலை வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். 11

முத்துஐயன்கட்டு குளத்தில்

## உயிரிழந்த இளைஞருக்கு நேற்று இறுதிச்சடங்கு

முல்லைத்தீவு, ஓக. 12
இராணுவத்தால் தாக்குதலுக்கு உள்ளான நிலையில், முத்துஐயன்கட்டு குளத்தில் மூழ்கி உயிரிழந்ததாகக் கூறப்படும் இளைஞரின் சடலம் அவரது வீட்டில் 11



## வெளியக அழுத்தத்தாலேயே பிரதமராக ஹரிணி நியமனம்!

பொதுஜன பெரமுன குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 12
வெளியக அழுத்தம் காரணமாகவே பிரதமர் பதவிக்கு ஹரிணி அமரசூரிய நியமிக்கப்பட்டார். எனவே, அந்தப் பதவியில் மாற்றம் வராது என்று பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.
பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், பெரமுனவின் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹன ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|---|
| திகதி 11.08.2025 | திகதி 11.08.2025 | திகதி 11.08.2025 | திகதி 11.08.2025 | திகதி 11.08.2025 | திகதி 11.08.2025 | திகதி 11.08.2025 | திகதி 11.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4160 | சீட்டிழுப்பு இலக்கம் 1227 | சீட்டிழுப்பு இலக்கம் 0186 | சீட்டிழுப்பு இலக்கம் 2266 | சீட்டிழுப்பு இலக்கம் 5918 | சீட்டிழுப்பு இலக்கம் 1948 | சீட்டிழுப்பு இலக்கம் 0493 | சீட்டிழுப்பு இலக்கம் 0034 |
| ஆங்கில எழுத்து J | வெற்றி இலக்கிளம் மீனம் | ஆங்கில எழுத்து A | ஆங்கில எழுத்து S | ஆங்கில எழுத்து H | ஆங்கில எழுத்து Y | ஆங்கில எழுத்து H | வெற்றி இலக்கிளம் கடகம் |
| | | | சுப்பர் இலக்கம் 18 | | | | |
| வெற்றி இலக்கங்கள் 34 43 53 77 | வெற்றி இலக்கங்கள் 13 30 55 57 | வெற்றி இலக்கங்கள் 2 1 3 3 | வெற்றி இலக்கங்கள் 06 27 40 53 | வெற்றி இலக்கங்கள் 6 6 8 0 6 8 | வெற்றி இலக்கங்கள் 12 35 55 63 | வெற்றி இலக்கங்கள் 8 0 6 8 | வெற்றி இலக்கங்கள் 23 31 45 53 |
| விசேட எழுத்து J | | | | | விசேட எழுத்து Y | | |

# கைதான மீனவர்கள் விடுதலைகோரி



# தொடர் வேலைநிறுத்தத்தில் இராமேஸ்வரம் மீனவர்கள்!

**சென்னை, ஓக.12**

**இலங்கைக் கடற்படையின் தொடர் கைது நடவடிக்கையைக் கண்டித்தும், இலங்கைச் சிறையிலுள்ள மீனவர்களை விடுதலைசெய்ய வலியுறுத்தியும் இராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் நேற்றுத் திங்கட்கிழமை முதல் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.**

இராமேஸ்வரம் மீன்பிடித்தல் துறைமுகத்தில் இருந்து மீன்பிடித் தடைக்காலம் முடிந்து மீன்பிடிக்கச் சென்ற 55 நாள்களில் 61 மீனவர்கள் 9 படகுகளுடன் எல்லை தாண்டி மீன்பிடித்தனர் என இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களை உடனடியாக விடுதலைசெய்யவேண்டும். தவறும் பட்சத்தில் நாளை புதன்கிழமை மிகப்பெரும் ஆர்ப்பாட்டமும், 15ஆம் திகதி உண்ணாவிரதப் போராட்டமும், 19ஆம் திகதி ரயில் மறியல் போராட்டமும் முன்னெடுக்கப்படும் என்றும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த வேலைநிறுத்தப் போராட்டம் காரணமாக இராமேஸ்வரத்தில் சுமார் 600க்கும் மேற்பட்ட மீன்பிடி விசைப்படகுகள் மீன்பிடிக்கக் கடலுக்குச் செல்லாமல் கரையில் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ளதுடன் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட மீன்பிடி சார்பு தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர்.

அதேவேளை இராமேஸ்வரம் மீனவர்கள் மீன்பிடிக்கக் கடலுக்குச் செல்லாததால் நாள் ஒன்றுக்கு சுமார் ஒரு கோடி ரூபா வரை அந்நியச்செலவாணி பாதிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-56,100)

## சுபிரி தன சம்பத

வெற்றி வாரம் 0626
திகதி 11.08.2025 தினம் திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கம் 2 0 7 4 4 3

## Super Ball

திகதி 11.08.2025 தினம் திங்கட்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 2892
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கம் 06 34 38 39

## சனிதா

திகதி 11.08.2025 தினம் திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கம் 02 16 44 51
வெற்றி வாரம் 5053

## லக்ன ராசி

திகதி 11.08.2025 தினம் திங்கட்கிழமை
மிதுனம்
வெற்றி இலக்கம் 09 11 29 58
சீட்டிழுப்பு வாரம் 4604

## KAPRUKA

திகதி 11.08.2025 தினம் திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து W
சுப்பர் இலக்கம் 35
வெற்றி இலக்கம் 04 07 59 74
வெற்றி வாரம் 2068

## அத கோடிபதி

திகதி 11.08.2025 தினம் திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கம் 03 30 48 66
வெற்றி வாரம் 2718

## JAYODA

திகதி 11.08.2025 தினம் திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கம் 02 22 30 40
வெற்றி வாரம் 2151

## கடலில் மூழ்கி வெளிநாட்டுப் பெண் உயிரிழப்பு

கொழும்பு, ஓக.12

அளுத்கம மொரகல்ல கடற்கரையில் நீராடிய வெளிநாட்டுப் பெண் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது. வியட்நாமைச் சேர்ந்த 48 வயதான பெண் ஒருவரே உயிரிழந்தவராவார்.

இவர் கடலில் நீராடியபோது அலையில் அடித்துச் செல்லப்பட்டார் என்றும், அவரது உடல் பெந்தரக் கடற்கரையில் கரையொதுங்கியது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

## இலங்கையின் முதற்தர செல்வந்தர் தம்மிக்கவைப் பின்தள்ளிய இஷார



கொழும்பு, ஓக.12

இலங்கையின் முதற்தர செல்வந்தராக இஷார நாணயக்கார உள்ளார் என்று கல்ப் நியூஸ் செய்திச் சேவை சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த 2010ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கையின் முதற்தர செல்வந்தராக இருந்த தம்மிக்க பெரேராவைப் பின்தள்ளி இஷார நாணயக்கார முதலிடத்துக்கு வந்துள்ளார் என்றும் கல்ப் நியூஸ் தெரிவித்துள்ளது.

'லங்கா ஓரிக்ஸ் லீசிங்' கம்பனியின் உரிமையாளரான இஷார நாணயக்கார, பல்வேறு நாடுகளில் மைக்ரோ கடன் திட்டங்கள், தேயிலை உள்ளிட்ட பல்வேறு வர்த்தகங்களில் முதலீடு செய்துள்ளார். அதன்மூலம் தற்போதைக்கு அவர் 1.6 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான சொத்துகளைக் கொண்டிருக்கிறார் என்றும் கல்ப் செய்திச் சேவை தெரிவித்துள்ளது. (ச-இ)

## 35 வருடங்களின் பின்னர் அகற்றப்பட்ட தோட்டா

அநுராதபுரம், ஓக.12

குடும்பஸ்தர் ஒருவரின் உடலிலிருந்த துப்பாக்கித் தோட்டா 35 ஆண்டுகளின் பின்னர் சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட்டுள்ளது. இந்தச் சத்திரசிகிச்சை அநுராதபுரம் மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1990ஆம் ஆண்டு இவர் ஏ9 வீதியில் கொடிகாமத்தில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது ஹெலிகொப்டரில் இருந்து தீர்க்கப்பட்ட துப்பாக்கி வேட்டு அவரது தொடைபகுதியைத் துளைத்துள்ளது. அவர் மீட்கப்பட்டு மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டநிலையில், அங்கு கடமையில் இருந்த வெளிநாட்டு மருத்துவர்கள் தொடையிலிருந்த துப்பாக்கித் தோட்டாவை நீக்கமுடியாத நிலையில், சத்திரசிகிச்சை மேற்கொண்டனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அந்தத் துப்பாக்கிச் தோட்டாவுடன் 35 ஆண்டுகள் அவர் வாழ்ந்த நிலையில், துப்பாக்கிச் சூடுபட்ட இடத்தில் அண்மைக்காலத்தில் வீக்கமும், சீழ் பிடித்தும் காணப்பட்டதால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அதையடுத்து அவருக்குச் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டு தொடையில் இருந்த துப்பாக்கித் தோட்டா அகற்றப்பட்டுள்ளது. (எ-41-131)



## புலமைப்பரிசில் பரீட்சை மதிப்பீடுகள் ஆரம்பம்

கொழும்பு, ஓக.12

நேற்றுமுன்தினம் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் முதற்கட்ட மதிப்பீடுகள் நேற்று ஆரம்பமாகியுள்ளன என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்தது. வினாத்தாள் திருத்தும் செயற்பாடுகள் எதிர்வரும் 22ஆம் திகதி [illegible] மையங்களில் நடைபெறும் [illegible] (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழாவின் பதின்மூன்றாவது நாள் மாலை உற்சவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது. நல்லூர்க் கந்தவேற்பெருமான் வள்ளிதெய்வானையுடன் இடப வாகனத்தில் வீதியுலா வந்து அடியார்களுக்கு அருள்பாலித்தார். (எ-41-66)




# தெய்வீகக்கலை அர்ச்சனை

யாழ்ப்பாணம், ஓக.12

இந்துசமயகலாசார அலுவல்கள்திணைக்களம் நல்லூர்க் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நடத்தும் "தெய்வீகக் கலை அர்ச்சனை" நிகழ்வு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் தேவஸ்தான பஜனைக்குழுவினரின் பஜனை நிகழ்வு இடம்பெறவுள்ளது. (எ-41)

## ஆன்மிக அருளுரை

யாழ்ப்பாணம், ஓக.12

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழாக் காலத்தில் சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டு வரும் ஆன்மிக அருளுரை இன்று செவ்வாய்க்கிழமை இரவு 8 மணி முதல் இரவு 8.30 மணி வரை நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீன மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் கலந்து கொண்டு 'அறியாமை பொறுத்திலையே!' எனும் தலைப்பில் ஆன்மிக அருளுரை ஆற்றவுள்ளார். (எ-41,66)


# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஓக.12

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்த சுக்கிரவாரக் கந்தபுராணப் படனத்தொடரின் 34ஆவது சொற்பொழிவு எதிர்வரும் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30மணிக்கு கோவில் சண்முக விலாச மண்டபத்தில் சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு, சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்கள் ஆசியுரையையும், பரிபாலனசபைத் தலைவர் சி.தயாநாதன் தலைமையுரையையும், சைவப்புலவர், பிரசங்கபூஷணம் க.கைலநாதன் 'சுக்கிரனுபதேசப் படலம்' எனும் விடயப் பொருளில் சிறப்புச்சொற்பொழிவையும் நிகழ்த்தவுள்ளனர்.


சொற்பொழிவிலிருந்து நீர்வைக்கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)



## நாணயமாற்று வீதம்

கொழும்பு, ஓக.12

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்ட நாணய மாற்று வீதத்தின் அடிப்படையில் அமெரிக்க டொலரின் விற்பனை விலை 304.6423 ரூபா ஆகவும் கொள்வனவு விலை 296.8184 ரூபாவாகவும் பதிவாகியிருந்தது. ஸ்ரேலிங் பவுண் ஒன்றின் கொள்வனவு விலை 398.1101 ரூபாவாகவும், விற்பனை விலை 410.711 ரூபாவாகவும் பதிவானது. யூரோ ஒன்றின் கொள்வனவு விலை 344.9640 ரூபாவாகும், விற்பனை விலை 356.7332 ரூபாவாகவும் பதிவாகியிருந்தது. (எ-இ)



# சின்னவெங்காயச் செய்கை திடீர் மழையால் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஓக.12

யாழ்.குடாநாட்டில் நேற்றுக்காலை கொட்டித் தீர்த்த கனமழையால் சின்னவெங்காயச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்போது சின்ன வெங்காயச் செய்கைக்கான அறுவடை இடம்பெற்றுவருகின்றது. அநேகமான இடங்களில் வெங்காயம் அறுவடை செய்யப்பட்டு உலரவிடப்பட்ட நிலையில் அவை மழையில் நனைந்து பாதிக்கப்பட்டுள்ளன. அத்துடன் அறுவடை செய்யப்படாத வெங்காயப் பயிர்களும் நீரில்மூழ்கி பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது என்றும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (எ-17)

## காரைநகரில் வாய்க்கால்கள் சீரமைப்பு

யாழ்ப்பாணம், ஓக.12

எதிர்வரும் பருவப் பெயர்ச்சி மழைகாலத்தை முன்னிட்டு வெள்ளநீர் வழிந்தோடும் வாய்க்கால்களைச் சீரமைக்கும் பணிகளை காரைநகர் பிரதேசசபை ஆரம்பித்துள்ளது. அத்துடன் வெள்ளத்தடுப்பு அணைகளும் அமைக்கப்பட்டு வருகின்றன. (எ-17)

## 15 ஆம் திருவிழா



நல்லூரான் சிறப்பம்சம்



### தினம் கூடுவர் அலங்கார அழகன் காட்சிகாண...

நீலமயிலழகன் தனை நிதம் வழிபடு
மடியார்கள் பாவங்கள் அழித்திடவே
பரமன் திருமகனாய் வீதி வருகின்றான்
தேடிவருமடியார்கள் அரோகரா ஒலியுடன்
நாடியே நல்லூர் வீதியில் தினம்
கூடியே அலங்கார அழகனை கண்டிடுவார்

திருமறைசெல்வர் பாலசுப்பிரமணியம்
வேலணை பாலா ஜே.பி.

### மஞ்சத்தில் மயில்வாகனன்

தஞ்சம் என வந்த அடியவரை
அஞ்சிடாமல் காக்கும் வேலன் அவன்
சஞ்சலங்கள் தீர்த்திடவே சேவல் கொடியுடன்
மஞ்சத்தில் வந்திடுவான் மயில்வாகனனாய்

வேல்கொண்டு வினைதீர்ப்பான்
வேங்கையாய் படையெடுப்பான்
வேதங்கள் ஓதிடவே வெற்றிவேலுடன்
வேட்டைக்குத் தயாராவான் சூரனுடன்

நல்லையம்பதி நாயகன் நீர்
நானிலம் காக்கும் சேவகன் நீர்
நமக்கெல்லாம் காவலன் நீர்
நாதனுடன் வந்திடுவீர் மஞ்சத்தில் நீர்

க.தர்ஷ்சினி
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்கவும். குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது கவனமாக இருக்கவும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சக ஊழியர்களால் பிரச்சினை ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** அதிர்ஷ்டகரமான நாள். இன்று நீங்கள் தொடங்க நினைக்கும் புதிய முயற்சி சாதகமாகமுடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார். ஆதாயம் உண்டாகும்.

**கடகம்:** பிள்ளைகளால் பிரச்சினை ஏற்படக்கூடும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** மனதில் இனம் தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். உற்சாகமாக இருப்பீர்கள்.

**கன்னி:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும். நல்ல செய்தி கிடைக்கக்கூடும்.

**துலாம்:** மனதில்தைரியமும்தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். முடிவுகளை எடுக்கலாம். முயற்சிகள் வெற்றிகரமாக முடியும் நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும். அலுவலகத்தில் வழக்கமான நிலையே காணப்படும்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த சலுகை கிடைக்கக்கூடும்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். ஆதாயம் உண்டாகும். காரியம் அனுகூலமாக முடியும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். தன்னம்பிக்கை அதிகரிக்கும். செலவுகள் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** உற்சாகமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆதாயம் கிடைக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் சுமாராகத்தான் இருக்கும்.

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். கருத்து வேறுபாடு நீங்கும். வாழ்க்கைத்துணை நீங்கள் கேட்டதை வாங்கிக்கொடுப்பார்.

# முயற்சியாளர்களுக்கான வாராந்த சந்தை ஆரம்பம்

## வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேசசபை அறிவிப்பு

வவுனியா, ஓக.12

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேசசபையால் வாராந்த சந்தை ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில், முயற்சியாளர்கள் தங்களின் உற்பத்திப்பொருள்களை விற்பனை செய்வதற்குப் பதிவு செய்துகொள்ளமுடியும் என்று வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேசசபைத் தவிசாளர் பா.பாலேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருள்களுக்கான சந்தை வாய்ப்பை வழங்கும் வகையில் எதிர்வரும் 17ஆம் திகதியிலிருந்து ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் வாராந்த சந்தையொன்றை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

விவசாயத்துறை, கைத்தொழிற்றுறைசார் உற்பத்திப்பொருள்களை வாராந்தம் விற்பனை செய்யமுடியும். இந்தச் சந்தர்ப்பத்தை பின்பற்றி பயன்பெற விரும்பும் முயற்சியாளர்கள் நாளை புதன்கிழமைக்கு முன்னதாக "வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேசசபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா" எனும் அலுவலக முகவரிக்கு நேரடியாகத் தொடர்புகொண்டு அல்லது அலுவலக நேரத்தில் 024 2225737 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு முன்பதிவுகளை மேற்கொள்வதுடன் மேலதிக விவரங்களையும் பெற்றுக்கொள்ளமுடியும் - என்றுள்ளது. (எ-41-110)



# மின்சார இணைப்பின்றி தேவிபுரம் மக்கள் அவதி

முல்லைத்தீவு, ஓக.12

முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பிரதேசசெயலகப் பிரிவுக்குட்பட்ட தேவிபுரம் பகுதியில் மின் இணைப்பு இன்றி பல குடும்பங்கள் அவதிக்குள்ளாகியுள்ளன.

மின் இணைப்புகளை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் தெரியப்படுத்தியதை அடுத்து வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் நேற்றுமுன்தினம் அங்கு நேரில் சென்று நிலைமைகளை ஆராய்ந்தார். மின் இணைப்பின்றி அங்குள்ள குடும்பங்கள் எதிர்நோக்கும் இடர்பாடுகள், மின் இணைப்பு வழங்கப்படாமைக்கான காரணம் தொடர்பாக அவர் கேட்டறிந்தார். மின் இணைப்பைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பாகக் கவனம் செலுத்தப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் உறுதியளித்தார். (ச-246)

# செயலிழந்தது ரயில் இயந்திரம்; 3 மணிநேரம் பயணிகள் அந்தரிப்பு

யாழ்ப்பாணம், ஓக.12

யாழ்ப்பாணம் - கொழும்பு இடையிலான இரவுநேர தபால் ரயிலின் இயந்திரம் செயலிழந்ததால் பயணிகள் சுமார் 3 மணித்தியாலங்கள் காத்திருக்க நேர்ந்துள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளது. காங்கேசன்துறையில் இருந்து புறப்பட்ட ரயில், பரந்தன் கிளிநொச்சி இடையே பயணித்த போது ரயில் இயந்திரம் செயலிழந்துள்ளது.

சுமார் 3 மணி நேரத்துக்குப் பின்னர், காங்கேசன்துறையில் இருந்து கொண்டுவரப்பட்ட மற்றொரு இயந்திரம் மூலம் ரயில் கொழும்பை நோக்கிப் பயணித்தது. (எ-இ)



# கனிமமணல் சுரண்டலுக்கு எதிராக யாழில் விழிப்புணர்வுப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஓக.12

மன்னாரில் பல்தேசிய நிறுவனங்களின் இல்மனைட் கனிமமணல் சுரண்டலைக் கண்டித்து, இளைஞர்கள் ஒன்றிணைந்து ஏற்பாடுசெய்த விழிப்புணர்வுப் போராட்டம் நேற்றுமுன்தினம் மாலை யாழ்ப்பாணப் பண்ணைப் பகுதியில் நடைபெற்றது.

கனிம மணல் அகழ்வைத் தடுக்கவும், மக்களின் பூர்வீக நிலங்களையும் இருப்பையும் பாதுகாக்கவும் 'கருநிலம் பாதுகாப்பு' என்ற கருப்பொருளுடன் மக்களை விழிப்புணர்வூட்டும் வகையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.


இதில் அரசியல் பிரதிநிதிகள், இளையோர் எனப் பலரும் கலந்துகொண்டதுடன் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளையும் ஏந்தியிருந்தனர். மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டது. (ச-20)

# தேங்காய் வீழ்ந்து குடும்பஸ்தர் காயம்

யாழ்ப்பாணம், ஓக.12

தென்னை மரத்தில் கொழுக்கித் தடியால் (கொக்கைச் சத்தகம்) பிடுங்கிய தேங்காய் தலையில் வீழ்ந்தால் குடும்பஸ்தர் காயமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் கடந்தவாரம் மட்டுவிலில் நடந்துள்ளது.

காயமடைந்தவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளார். (எ-41-131)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்டிப்பாக அதிகரித்துள்ள சுற்றுலாத்துறை வருமானம்!

**கொழும்பு, ஓக.12**

**இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 1.4 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர். கடந்த ஆண்டு இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது இது குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் கொண்டுள்ளது என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.**

அதேவேளை, கடந்த ஜூலை மாதத்துக்கான சுற்றுலா வருவாய் 318.5 மில்லியன் அமெரிக்க டொலரை எட்டியுள்ளது.

இது கடந்த ஆண்டு ஜூலை மாதம் கிடைத்த 151.1 மில்லியன் அமெரிக்க டொலரை விடவும் அதிகமாகும்.

இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையில், ஆண்டுக்கு ஆண்டு சுற்றுலா வருவாயானது 7.8% அதிகரிப்பைக் கொண்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## உயர்தரப் பரீட்சை விண்ணப்ப இறுதித் திகதி இன்று

கொழும்பு, ஓக.12

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் பரீட்சை விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வதற்கான இறுதித் திகதி இன்று நள்ளிரவுடன் முடிவடைகிறது. அதேவேளை, மாணவர்கள் தங்கள் விண்ணப்பப்படிவங்களை டிஜிற்றல் முறையில் சமர்ப்பிக்க அனுமதிக்கும்வகையில், பரீட்சைத் திணைக்களம் ஒன்லைன் விண்ணப்ப செயல்முறையை எளிதாக்கியுள்ளது என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (எ-இ)

## அதிகூடிய வாகன விலை இலங்கைக்கு 3ஆம் இடம்

கொழும்பு, ஓக.12



உலக வங்கியின் வாகன விலை நிலைக் குறியீட்டின்படி 2021ஆம் ஆண்டில் வாகனக் கொள்வனவில் உலகின் மூன்றாவது அதிக விலையைக் கொண்ட நாடாக இலங்கை தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தக் குறியீட்டில் இலங்கையின் மதிப்பெண் 175 எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வாகன விலைகள் உலகளாவிய சராசரி அளவுகோலான 100ஐ விடவும் இலங்கையில் விலை 1.75 மடங்கு அதிகமாகும். இந்தப் பட்டியலில் சிங்கப்பூர் மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகள் முதல் 2 இடங்களில் உள்ளன. (எ-இ)





## இந்திய மீனவர்கள் ஏழு பேர் கைது

மன்னாரை அண்மித்த கடற்பகுதியில் எல்லைதாண்டி மீன்பிடித்த இந்திய மீனவர்கள் 7 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது. அவர்களின் படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட படகுடன் கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்கள் தலைமன்னார் துறைமுகத்துக்கு அழைத்துவரப்பட்டு சட்டநடவடிக்கைகளுக்காக நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

# வீதியில் மணலைக் கொட்டி தப்பியோடிய மாபியாக்கள்

### பயணிக்கமுடியாது மக்கள் சிரமம்

கிளிநொச்சி, ஓக.12

சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுபவர்கள் மருதங்கேணி புதுக்காடு பிரதான வீதியில் மணலைக் கொட்டிச்செல்வதால் அந்த வீதியூடாகப் பயணிப்பது பெரும் சிரமமாக உள்ளது என்று பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுபவர்கள் மணலை வவுனியா, யாழ்ப்பாணம் போன்ற இடங்களுக்குக் கடத்திச்செல்வதற்கு இந்த வீதியையே பயன்படுத்துகின்றனர். சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுபவர்களைக் கைதுசெய்வதற்காக நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சிறப்பு அதிரடிப் படையினரும், பொலிஸாரும் முற்றுகையிட்டுச் சோதனையிட முயன்ற நிலையில், அதை அறிந்த மணல் கடத்தல்காரர்கள் மணலை வீதியோரங்களில் பறித்துவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர். வீதியோரங்களில் கொட்டப்பட்ட மணல் வீதிகளில் பரவிக்கிடப்பதால் வீதியூடாகப் பயணிக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது என்று பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அதேவேளை, வீதியோரங்களில் காணப்படும் மணலை அகற்றும் நடவடிக்கைகள் கிளிநொச்சி வீதி அபிவிருத்தி அதிகாரசபையினரால் மேற்கொள்ளப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.




## கள்ளும் ஹர்த்தாலும்

கூடா நட்பு கேடாத்தான் முடியும். முல்லைத்தீவில ஆமிக்காம்புக்குள்ள தகரமெடுக்கப் போன ஒரு பெடியன் செத்த விசயம் காட்டுத்தீ மாதிரி பத்தியெரியுது. அரசியல்வாதியள் இந்த நெருப்பில குளிர்காய நினைக்கினம். நீதியை நிலைநாட்டுறதுக்காக போராட்டமும் செய்யப் போயினம். அதிலையும் ஒரு கட்சி ஹர்த்தாலுக்குக்கூட அழைப்பை விட்டிருக்கு. ஆனால் அப்பிடி ஹர்த்தால் செய்யிற அளவுக்கு இது முக்கியமான பிரச்சினையோ எண்டதும் கேள்விக்குறிதான். ஆமியால ஒரு பெடியன் சாகிறது எண்டதை ஏற்றுக்கொள்ள ஏலாதுதான். அதில ஆருக்கும் மாற்றுக்கருத்து இருக்கமுடியாது. ஆனால் அதுக்காக வடக்கு- கிழக்கு முழுக்க ஹர்த்தால் வைக்கிற அளவுக்கு நியாயம் இருக்கோ எண்டதைத் தான் ஒருக்காச் சிந்திச்சுப் பாக்கோனும்.

றோட்டில போன பெடியளை ஆமி சுட்டோ இல்லாட்டி விசாரணை எண்டு கூப்பிட்டிட்டோ கொலை செய்திருந்தா அதுக்கு நீதி கேட்டு எல்லாரும் றோட்டுக்கு இறங்கத்தான் வேணும். ஆனால் இஞ்ச நடந்த விசயமே வேற. செத்தபெடியனும், அவரோட சேர்ந்து ஆமிக்காம்புக்கு போன மிச்சப்பேரும் ஏற்கனவே ஆமிக்காரரோட நல்ல 'ஹொந்தாய்'. ஒண்டாச் சேர்ந்து தண்ணியடிக்கிற அளவுக்கு நெருக்கம். ஆமிக்காரருக்குத் தேவையான 'தண்ணி வெந்நி' எல்லாம் இவைதான் சப்ளை செய்யிறவை. அதைமாதிரி தங்களுக்கு வாற சாமான்களை இவையளுக்கு ஆமிக்காறர் குடுக்கிறவை. அப்பிடிக் கொள்ளலும் குடுத்தலுமா ஆமிக்கும் இந்தப் பெடியளுக்கும் நல்ல உறவு. அப்பிடிப்பட்டவை ஆமிக்காரருக்கே கள்ளு வாங்கித் தாறம் எண்டிட்டு காசை வாங்கிக்கொண்டு டிமிக்கி விட்டிருக்கினம். அதால கடுப்பான ஆமிக்காரர், "கள்ளு நாளைக்கும் வாங்கலாம், நாங்கள் இந்த காம்பை விட்டிட்டு போகப்போறம்., இஞ்ச உள்ள தகரங்களை இண்டைக்கே வந்து எடுங்கோ. விட்டால் நாளைக்கு வேற குரூப் வந்து கொண்டுபோடும்" எண்டு சொன்னதை நம்பி இந்தப் பெடியள் காம்புக்கு போயிருக்கினம்.


அங்க வைச்சு கள்ளு வாங்கித்தராத கோபத்தில இந்தப் பெடியளுக்கு ஆமிக்காரர் சாத்துச் சாத்தெண்டு சாத்த, அடி தாங்காமல் அஞ்சுபேரும் ஒவ்வொரு திக்கில ஓடித் தப்பியிருக்கினம். அப்பிடி ஓடிப்போனதில ஒராள்தான் இப்ப குளத்தில சடலமா மீட்கப்பட்டிருக்கிறார். ஆமிக்குப் பயந்து குளத்துக்க ஒளிச்சிருக்கேக்க, நீந்தத் தெரியாமல் தண்ணிக்குள்ள தாண்டுபோய் ஆள் செத்திருக்க வேணும் எண்டுதான் சொல்லுப்படுது. அஞ்சு பெடியளுக்கும் போன் பண்ணிக் கூப்பிட்ட ஆமிக்காரரை கைதும் செய்தாச்சு. அப்ப எதுக்கு ஹர்த்தால் வைக்கோனும்? எல்லா ஆமிக்காம்பிலையும் இருக்கிற தகரங்களை அள்ள விடச்சொல்லியோ? இல்லாட்டி ஆமிக்குக் கள்ளு வாங்கிக் குடுக்கிறதுக்கு எங்களுக்கு உரிமை இருக்கெண்டோ? இல்லாட்டி ஆமியோட 'ஹொந்தாயா' இருக்க விடச்சொல்லியோ? ஒரு உயிர் அநியாயமாப் போட்டுது. இனியும் இப்பிடி நடக்காமல் இருக்கோனுமெண்டால் ஆமிக்காரரோட இப்பிடி நெருக்கமா பழகிறதை பெடியள் கைவிட்டு, துஷ்டனைக் கண்டால் தூரவிலகவேணுமே தவிர, ஹர்த்தால் வைச்சு கடைக்காரரின்ர ஒருநாள் பிழைப்பையும் கெடுக்கக்கூடாது கண்டியளோ.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 12 . 06 . 1940 |  | 08 . 08 . 2025 |

## குணமணி முத்துலிங்கம்

யாழ். ஊர்காவற்றுறை, சுருவிலை பிறப்பிடமாகவும், சிவன்பண்ணை வீதி, கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட குணமணி முத்துலிங்கம் அவர்கள் கடந்த (08.08.2025) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - நாகம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான ராமலிங்கம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற முத்துலிங்கம் அவர்களின் மனைவியும், காலஞ்சென்றவர்களான நாகராசா, சோமாவதி, இராசலிங்கம் ஆகியோரின் சகோதரியும், செல்வி (மண்கும்பான்), குகன் (பிரான்ஸ்), ஜெயா (ஜேர்மனி), தயா, மணிவண்ணன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஆனந்தசிவம், தசாயினி, சந்திரகுமார், நகுலன், கிருபாளினி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.08.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் சிவன்பண்ணை வீதி, கொட்டடியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்
076 305 4745

108, சிவன்பண்ணை வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.
(CS/59088) J-1

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு கடந்த (14.07.2025) திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்
## நடராசர் சிவபாலகணேசன்

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (12.08.2025) செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனிததீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (13.08.2025) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மரணச்செய்தி அறிந்து நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்து துயர் பகிர்ந்தவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் பங்கு கொண்டவர்களுக்கும், தொலைபேசி, முகநூல், மின்னஞ்சல் மூலமாக எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்க்கொத்து சாத்தியவர்களுக்கும், இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் செய்துவரும் அன்பு நெஞ்சங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சபாபதிப்பிள்ளை வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.
(CS/59086) J-1
குடும்பத்தினர்
077 507 7432

# கடை வாடகைக்கு தேவை

யாழ்ப்பாணத்தை அண்மித்த பகுதியில் பிரதான வீதிகளில் கடை / வீடு வாடகைக்கு தேவை.
மேலதிக விபரங்களுக்கு
077 606 2716, 077 664 3496
(CS/59087) J-1

# பெறுகைகளுக்கான அறிவித்தல்
## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்
## வாகன சுத்திகரிப்பு சேவை 2025 - 2026

தலைவர், பிராந்திய பெறுகைகள் குழு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்குட்பட்ட வாகனங்களுக்கான சுத்திகரிப்பு சேவையினை வழங்குவதற்காக தகமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலை மனுப்பத்திரங்களை கோருகின்றார்.

1. யாழ் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட வாகனங்களிற்கான சுத்திகரிப்பு சேவை.

| தொ.இல | பெறுகை இலக்கம் | பெறுகையின் தன்மை | கேள்வி உத்தரவாத முறி | கேள்வி திறக்கும் நேரம் |
|---|---|---|---|---|
| 01 | NP/RDHS/VS/2025 | வாகன சுத்திகரிப்பு | 100,000.00 | 26.08.2025 K.g 10.30 |

01. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி மேற்கொள்ளப்படும்.
02. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப்புப் பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.
   அ. விலை மனுதாரர் வலிதான வியாபாரப் பெயர் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   ஆ. அத்துடன் தொடர்புடைய வழங்கு பொருட்களின் / சேவையினை வழங்குவதற்கான அனுமதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   இ. அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
03. ஒப்பந்த அளிப்பிற்கு தகமை பெறுவதற்கு விலைமனுதாரர்கள் பகுதி 2 – பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
04. ஆர்வமுள்ள விலை மனுதாரர்கள் மேலதிக தகவல்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலும் 0212226253, 0212212278 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாகவும் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் பெறுகை ஆவணங்களை இவ்முகவரியில் வேலைநாட்களில் 09:00 மணிதொடக்கம் 15:00 மணிவரை பரிசீலிக்க முடியும்.
05. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் 12.08.2025 ஆம் திகதி முதல் 25.08.2025 ஆம் திகதி வரை 09:00 மணி தொடக்கம் 15:00 மணி வரையான காலப் பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக மீளளிக்கப்படாத வைப்பாகச் ரூபா 3,000.00 அலுவலக காசாளரிடம் செலுத்தி அப்பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.
06. பெறுகை ஆவணங்கள் 26.08.2025 அன்று காலை 10.30 மணிக்கு முன்பதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலை மனுக்கள் அனைத்தும் பெறுகை நேரமுடிவில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான பெறுகைகள் நிராகரிக்கப்படும்.
07. பெறுகைக்கு முன்னரான கூட்டமொன்று திணைக்களத் தலைவரின் கீழ் குறிப்பிட்டுள்ள அமைவிடத்தில் 19.08.2025 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெறும்.
08. மேற்குறிப்பிட்ட பெறுகைப் பிணைப்பணம் வேண்டும். என்பதுடன் இப்பிணைப்பணம் வங்கியில் செலுத்தி அவ் ஆவணத்தினை கேள்வி ஆவணத்துடன் இணைத்தல் வேண்டும்.
09. இவ் விலை மனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்தோ எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ் விலைமனு கோரலை ரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

வைத்தியகலாநிதி ஆ. கேதீஸ்வரன்,
தலைவர், பிராந்திய பெறுகைக் குழு
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்
021-222-3725, 021-222-6253, 021-221-4966 தொலைநகல்: 021-222-8971
மின்னஞ்சல்: rdhsjaffna15@gmail.com

## யாழ்ப்பாணம் மாநகரசபை
நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவகால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான
மீள்ஏலம் கோருவது தொடர்பான அறிவித்தல் -2025

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால் தற்காலிக கடைகள் அமைப்பதற்கான மீள்ஏலம் கோரப்படவுள்ளன.

- ஏலம் கோரவுள்ள திகதி :- 15.08.2025 முற்பகல் 10.00 மணிக்கு
- ஏலம் கோரப்படவுள்ள இடம் :- நாணாவித இறைவரி பகுதி
- இது தொடர்பான மேலதிக விபரங்கள் , நிபந்தனைகள், வரைபடம் என்பன தொடர்பாக மாநகர சபை நாணாவித இறைவரிப்பகுதியில் அறிந்து கொள்ளமுடியும்

வி.மதிவதனி
மாநகர முதல்வர்,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.


முத்து ஐயன்கட்டில்

# உயிரிழந்த இளைஞருக்கு தமிழரசுக்கட்சி அஞ்சலி

முல்லைத்தீவு, ஓக.12

முல்லைத்தீவு முத்துஐயன்கட்டு இராணுவ முகாமில் சிப்பாய்களால் தாக்கப்பட்டு காணாமற்போனநிலையில் சடலமாக மீட்கப்பட்ட இளைஞருக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் நேற்று அஞ்சலி செலுத்தினர்.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆகியோரின் தலைமையில் முல்லைத்தீவு மாவட்ட இலங்கைத் தமிழரசுக்கட்சியினர் அஞ்சலி செலுத்தினர்.

இதில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பிரதேச சபைகளின் தவிசாளர்கள், பிரதேசசபை உறுப்பினர்கள், தமிழரசுக்கட்சியின் தொண்டர்கள் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

(ச-246)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளொரு நல்வார்த்தை

வெற்றியாளர்கள் கடின உழைப்பை வெற்றியாக மாற்றக்கூடியவர்கள், தோல்வியடைந்தவர்களோ அதைத் தண்டனையாகப் பார்ப்பவர்கள்.

– லூ ஹோல்ட்ச்–

# காஸாவுக்குக் காட்டிய கருணை நமக்கில்லையா?

இன்று காஸாவில் நடக்கும் பட்டினியின் மூலமான இனப்படுகொலை, அன்று முள்ளிவாய்க்காலில் நடந்த மானுடப் பேரவலத்தின் இரண்டாம் அத்தியாயமாக அமைந்திருக்கிறது. பலஸ்தீன மக்களின் துயரத்தை உலகம் கண்டிக்கும் நிலையில் ஈழத் தமிழரின் இரத்தத்தில் நனைந்த முள்ளிவாய்க்காலின் நினைவுகள் மீண்டும் எழுகின்றன. பிரான்ஸ், அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகள் பலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரித்திருக்கும் நிலையில், தமிழ் மக்களின் கோரிக்கை மட்டும் ஏன் மறுக்கப்பட்டது என்பது இன்னமும் விடைதெரியாக் கேள்வியாக ஊசலாடுகின்றது.

2009 மே மாதம், முள்ளிவாய்க்காலில் நடந்த இறுதிப் போரில், பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்டனர். குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் என வேறுபாடின்றி கொல்லப்பட்ட அப்பாவி மக்களுக்கு இன்னமும் நீதி கிடைக்கவில்லை. இன்று காஸாவில் நடப்பதும் அதே கதைதான். இஸ்ரேலின் கட்டுப்பாடற்ற குண்டுத் தாக்குதல்களின்போது பலஸ்தீன குழந்தைகள் இலக்குவைக்கப்படுகின்றனர். காஸாவில் ஒவ்வொரு ஐந்து நிமிடத்திற்கும் ஒரு குழந்தை உயிரிழப்பதாக புள்ளிவிவரங்கள் சொல்கின்றன.மருத்துவமனைகள் தாக்கப்படுகின்றன. உணவு, தண்ணீர், மருந்துகள் தடுக்கப்படுகின்றன. இது ஓர் இனத்தை முற்றாக அழிக்கும் கொடூரமான திட்டம். இதே மாதிரியான கொடுமைகள்தான் முள்ளிவாய்க்காலிலும் நடந்தன. ஆனால் அப்போது உலகம் மௌனம் காத்தது. இன்று காஸாவுக்கு ஆதரவாக சர்வதேசம் குரலெழுப்பினாலும்கூட, அந்த மக்களின் பசி தீர்க்கவோ, மருத்துவ உதவிகளை வழங்கவோ, போரை நிறுத்தவோ எந்தவொரு நகர்வையும் சர்வதேசம் முன்னெடுத்திருக்கவில்லை.

பலஸ்தீனத்திற்கு சர்வதேச ஆதரவு கிடைக்கும்போது, ஈழத்தமிழர்களின் கோரிக்கை மட்டும் ஏன் குப்பைக்கூடைக்குள் கடாசப்பட்டது? தமிழர் தேசம் ஒரு தனி நாடாக அங்கீகரிக்கப்பட்டிருந்தால், தமிழினத்தின் தலைவிதியே மாறியிருக்கும். ஆனால் மேற்குலகின் இரட்டை நிலைகள், அரசியல் சூழ்ச்சிகள், ஈழத்தமிழரின் கோரிக்கைக் குரல்களைப் புறக்கணித்தன. இன்றுகாஸாவில்நடக்கும் போர்க்குற்றங்களுக்கு எதிராக உலகம் குரல்கொடுக்கிறது. ஆனால் ஈழத்தில் நடந்த இனப்படுகொலைக்கு நீதி கிடைக்குமா?

ஈழத்தமிழரின் போராட்டம் ஒரு தாயகத்திற்காக, தன்னுரிமைக்காக, மக்களின் பாதுகாப்பிற்காக நடத்தப்பட்டது. அதேபோல பலஸ்தீன மக்களும் தங்கள் நிலத்திற்காக போராடுகின்றனர். இரண்டு இனங்களும் ஒரே மாதிரியான கொடுமைகளை சந்தித்திருக்கின்றன. ஆனால் ஒன்று மட்டும் வெளிப்படையானது. சர்வதேச அரங்கு சக்தி வாய்ந்தவர்களின் குரலை மட்டுமே கேட்கிறது. அதனாலேயே எங்களின் குரல் சர்வதேசத்தின் காதில் விழவில்லை போலும். இன்று பலஸ்தீனம் தனி நாடு என சர்வதேசத்தால் அங்கீகரிக்கப்பட்டுவரும் நிலையில், ஈழத் தமிழரின் கனவும் ஒரு நாள் நிறைவேறவேண்டும். முள்ளிவாய்க்காலின் படுகொலைகளுக்கு நீதி கிடைக்கவேண்டும். காஸாவில் நடக்கும் பேரழிவு நிறுத்தப்பட வேண்டும். இரண்டு இனங்களின் துயரமும் வரலாற்றில் மீண்டும் நிகழவே கூடாது. உலகின் மௌனம் இன்னொரு இனத்தின் அழிவுக்கு காரணமாகிவிடவும்கூடாது.




# பொலிஸார் தவறு இழைத்தால் மக்கள் முறைப்பாடளிக்கலாம்

பதில் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

**கொழும்பு, ஓக.12**
**பொலிஸாரின் தவறான நடத்தைகள் குறித்து காணொலிகளுடன் இரகசியமாகப் பொதுமக்கள் முறைப்பாடு செய்யமுடியும். அதற்காக இந்த வாரம் வட்ஸ் அப் இலக்கமொன்று அறிமுகப்படுத்தப்படும் என்று பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், பொதுமக்களுக்குத் தகவல்களை வழங்க பல முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதன்படி இந்த வாரத்துக்குள் வட்ஸ்அப் மூலம் தகவல்களை வழங்கும் வசதி ஏற்படுத்தப்படும். பொலிஸ் அதிகாரிகள் தவறு செய்தால், பொதுமக்கள் அதிகாரிகளால் தவறான செயல்களுக்கு ஆளானால் அந்தத் தகவலை காணொலிகளுடன் அனுப்பவும்.

போக்குவரத்து மீறல்கள் மட்டுமல்லாமல், பொலிஸ் அதிகாரிகள் செய்யும் எந்தவொரு குற்றத்தையும் அதன்மூலம் முறைப்பாடளிக்கமுடியும். அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ச-இ)

# பொரளை துப்பாக்கிச்சூடு: மூவர் கைது

கொழும்பு, ஓக.12
கடந்த 7ஆம் திகதி பொரளையில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துக்கு உதவிய குற்றச்சாட்டில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
பொரளை மற்றும் தெமட்டகொடவைச் சேர்ந்தவர்களே கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் ஏற்கனவே ஒருவர் கைதுசெய்யப்பட்டுத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.
மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றிருந்தனர். இந்தச் சம்பவத்தில் ஐவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், பின்னர் இருவர் உயிரிழந்தனர். (எ-இ)

# அம்பருடன் ஒருவர் கைது

கொழும்பு, ஓக.12
திமிங்கில வாந்தியை (அம்பர்) உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் திவுலபிட்டியவில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
சந்தேகநபரிடம் இருந்து ஒரு கிலோ 200 கிராம் அம்பர் மீட்கப்பட்டுள்ளது என்று தெரிவித்த பொலிஸார் அதன் பெறுமதி சுமார் 5 மில்லியன் ரூபா என்றும் தெரிவித்துள்ளனர்.
இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை திவுலபிட்டியப் பொலிஸார் முன்னெடுத்துவருகின்றனர். (எ-இ)

# வலையில் சிக்கிய கைக்குண்டு

கொழும்பு, ஓக.12
இராஜாங்கனயக் குளத்தில் இருந்து விவசாயத்துக்குத் தண்ணீர் வழங்கும் பிரதான நீர்ப்பாசனக் கால்வாயில் மீன்பிடித்த மீனவர்களின் வலையில் கைக்குண்டு ஒன்று சிக்கியுள்ளது.
இந்தக் கைக்குண்டு வெளிநாட்டில் தயாரிக்கப்பட்டது என்றும், சில நாள்களுக்கு முன்னரே கால்வாயில் வீசப்பட்டிருக்கலாம் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-இ)

# தேயிலையிலிருந்து மதுபானம் தயாரிப்பு

இலங்கையில் அறிமுகம்



கொழும்பு, ஓக.12
சர்வதேசப் புகழ்பெற்ற இலங்கைத் தேயிலையில் இருந்து மதுபானம் தயாரிக்கும் புதிய முயற்சியொன்று தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. 'சிலோன் டீ லிக்கர்' எனும் பெயருடன் குறித்த மதுபானத் தயாரிப்புகள் வெகுவிரைவில் சந்தைக்கு வரவுள்ளன. களுத்துறையில் உள்ள தனியார் தொழிற்சாலையொன்றே அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. இவற்றில் தேயிலையின் நறுமணம் மற்றும் சுவை என்பன உள்ளடங்கியிருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

நாளை
புதன்கிழமை - ஆடி 28
13.08.2025
சுபநேரம் : 04.35 - 06.05
ராகுகாலம் : 12.05 - 01.35



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### வெற்றிவேலு கந்தையா



குடாரப்பு, நாகர்கோயிலைப் பிறப்பிடமாகவும், புலோப்பளை மேற்கு, பளை, அல்லாரைவீதி, மீசாலை கிழக்கு, மீசாலையை வதிவிடமாகவும் கொண்ட வெற்றிவேலு கந்தையா அவர்கள் நேற்று (11.08.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வெற்றிவேலு - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்ற செல்லத்துரை - தங்கம்மா தம்பதியரின் மருமகனும், செல்வமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அஜந்தாவின் (முன்னாள் கிராம சேவையாளர் புலோப்பளை, மேற்கு) பாசமிகு தந்தையும், அபராஜிதன் (அதிபர்.வரணி இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம்) அவர்களின் அன்பு மாமனாரும், காவியா ( மாணவி யா/ சாவகச்சேரி இந்து கல்லூரி, உயர்தர பிரிவு) அவர்களின் அன்பு பேரனும், காலஞ்சென்ற நல்லம்மாவின் பெறாமகனும், காலஞ்சென்ற வீரவாகு மற்றும், வீரசிங்கம், வீரகுமாரி, செல்வகுமாரி ஆகியோரின் அன்பு சகோதரரும் தவமலர், அரியதேவி, கந்தசாமி (இத்தாலி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அல்லாரை வீதி, மீசாலை கிழக்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இன்று (12.08.2025) செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 12.30 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தோற்றம் 24.10.1948 மறைவு 11.08.2025

அல்லாரைவீதி,
மீசாலை கிழக்கு,
மீசாலை

தகவல்:
தி. அபராஜிதன் மருமகன்
077 812 5468

(CR/45779) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 22 . 11 . 1963 மறைவு 11 . 08 . 2025

### செபஸ்ரியாம்பிள்ளை அருள்தாஸ்

கிளிநொச்சி, புலோப்பளை கிழக்கு, பளையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்ரியாம்பிள்ளை அருள்தாஸ் அவர்கள் நேற்று (11.08.2025) திங்கட்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செபஸ்ரியாம்பிள்ளை மற்றும் - எலிசபத் தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான வரப்பிரகாசம் - அன்னக்கிளி தம்பதியரின் மருமகனும், அருந்தவராணியின் அன்புக் கணவரும், ரேணுகா, (வைத்தியர், ஆதாரவைத்தியசாலை, காத்தான்குடி), டணிசி (தாதி, யாழ்போதனா வைத்தியசாலை), ஆகியோரின் அன்புத்தந்தையும், சாமுவேல்றஜீன் (வைத்தியர், தேசிய வைத்தியசாலை, கண்டி) அவர்களின் மாமனாரும், பியூலினின் அன்பு பாட்டனாரும், அருளானந்தம், மேரி சறோஜா (தேவி), அன்னமேரி (ஆசிரியர்), அன்ரனி (நவம் - UK), மேரி ஜெனிவா, காலஞ்சென்றவர்களான அமிர்தநாயகம், மேரி ஜசிந்தா, அலக்ஸாண்டர், மேரி அல்போன்சா ஆகியோரின் அன்பு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க திருப்பலி புலோப்பளை புனித பேதுருவானவர் ஆலயத்தில் நாளை (13.08.2025) புதன்கிழமை பிற்பகல் 02.30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்
076 241 0123
076 282 9248

புலோப்பளை கிழக்கு,
பளை.

(CS/59089) J-1

## சிறுவர்களிடையே எலிக்காய்ச்சல் அதிகரிப்பு

சிறுவர்களிடையே ஆபத்தான எலிக்காய்ச்சல் பரவி வருகின்றது என்று கொழும்பு சீமாட்டி சிறுவர் மருத்துவமனையின் விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: பாடசாலை விடுமுறைக் காலமான இக்காலத்தில், சிறுவர்களிடத்தில் எலிக்காய்ச்சல் நோய் அதிகரித்து வருகிறது. சிறுவர்கள் பெரும்பாலும் நெல் வயல்கள் அல்லது திறந்தவெளிகளுக்கு காற்றாடியை பறக்க விடுவது போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதால் இவை நிகழ்கின்றன – என்றார். (ம)

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ். நகரில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. 35 வயதிற்கு மேற்பட்ட சிறு குடும்பம் விரும்பத்தக்கது.

## வேலையாள் தேவை

வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு 35 வயதிற்கு மேற்பட்ட ஆண் / பெண் வேலையாள் தேவை.

தொடர்புகளுக்கு:
077 438 3906

(CS/59090) J-1

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### செல்லையா தவனேஸ்வரன்

திதி: 12.08.2025

மண்ணோடு உங்கள் பூதவுடல்
மறைந்துவிட்டாலும் - நினைவுகள்
எங்கள் இதயங்களில் இருந்து
ஒருபோதும் மறைவதில்லை
எம்மிடம் விட்டுச்சென்ற பாசமான
நினைவுகளை எண்ணி
வணங்குகின்றேன்


தோற்றம் 10.04.1955 மறைவு 20.07.2019

ஞானவைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு.

(CS/3819) J-1

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



தோற்றம் 04 . 04 . 1967 மறைவு 09 . 08 . 2025

### பேரின்பம் கிருபானந்தன்

யாழ். புங்குடுதீவு 1ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், புங்குடுதீவு, இந்தியா, சுவிஸ் (Lausanne) ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட பேரின்பம் கிருபானந்தன் அவர்கள் நேற்று (09.08.2025) சனிக்கிழமை சுவிஸில் காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான பேரின்பம் (Yoga Trading Company)-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், புங்குடுதீவு 7ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், தற்போது கனடாவில் வசித்து வரும் அமிர்தலிங்கம்-மனோராணி தம்பதியின் அன்பு மருமகனும், கலைவதனி (வதனி) அவர்களின் பாசமிகு கணவரும், சஷானா, சபீதா, சஜித் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஞானவதி (கனடா), சரஸ்வதி, குகேந்திரன், கனகேந்திரன், யோகவதி, மதிதரன் (கொழும்பு), கிருஷ்ணகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.08.2025) புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு Chemin Du Capelard 5,1007 Lausanne Switzerland இல் நடைபெற்று தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பலஸ்தீன அரசை அங்கீகரிக்கும் ஆஸி.

மெல்பேர்ன், ஓக.12

**ஹமாஸ் அமைப்பு பலஸ்தீன அரசாங்க நிர்வாகத்தில் பங்கேற்கக்கூடாது என்ற நிபந்தனையுடன் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் எதிர்கால அமர்வில் பலஸ்தீன அரசு அங்கீகரிக்கப்படும் என்று அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது.**

அவுஸ்திரேலியப் பிரதமர் அன்டனி அல்பெனிஸ் இதை உறுதிசெய்துள்ளதுடன், இரண்டு தேசக் கொள்கை மத்திய கிழக்கில் வன்முறையை நிறுத்துவதற்கு மனிதகுலத்துக்கான சிறந்த நம்பிக்கை என்று தெரிவித்துள்ளார்.

பலஸ்தீன இஸ்ரேலிய தேசங்களை உருவாக்குவதற்கான 181ஆவது தீர்மானத்துக்கு ஆதரவாக முதலில் கையை உயர்த்திய நாடு அவுஸ்திரேலியா என்றும் அன்டனி அல்பெனிஸ் தெரிவித்துள்ளார். இராணுவக் களைவு, பொதுத்தேர்தல்களை நடத்துதல், இஸ்ரேலின் இருப்பை அங்கீகரித்தல் போன்ற வாக்குறுதிகளை பலஸ்தீன அதிகாரசபை வழங்கியுள்ளது என்றும் அவுஸ்திரேலியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அவுஸ்திரேலியாவில் உள்ள யூத சமூகத்தினர் உடனடியாக அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் இந்த முடிவை கண்டித்துள்ளனர்.

பாலியல் வன்முறை மற்றும் கொலைகளில் ஈடுபட்டவர்களுக்கு தொழிற்கட்சி அரசாங்கம் வெகுமதி வழங்கவுள்ளது என்று அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (ஏ-இ)

## இஸ்ரேலின் தாக்குதலில் ஊடகவியலாளர்கள் பலி



லண்டன், ஓக.12

காஸா நகரத்தின் அல்சிபா மருத்துவமனைக்கு அருகில் இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் அல்ஜசீராவின் ஐந்து ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

மருத்துவமனையின் முன்வாயில் தாக்கப்பட்டபோது அந்தப் பகுதியில் இருந்த ஊடகவியலாளர் கூடாரத்திலிருந்த அனஸ் அல்ஷரீப் மற்றும் முகமது க்ரீகே, ஒளிப்படப்பிடிப்பாளர்களான இப்ராஹிம் ஜாஹர், முகமது நௌபல் மற்றும் மோமன் அலிவா ஆகியோர் கொல்லப்பட்டனர் என அல்ஜசீரா தெரிவித்துள்ளது.

இந்த 'இலக்குவைக்கப்பட்ட படுகொலை' ஊடக சுதந்திரத்தின் மீதான மற்றுமொரு அப்பட்டமான மற்றும் முன்கூட்டியே திட்டமிடப்பட்ட தாக்குதல் என அல்ஜசீரா தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலில் மொத்தமாக ஏழு பேர் கொல்லப்பட்டனர் என அல்ஜசீரா தெரிவித்துள்ளது. (ஏ-இ)

## வீதியோரவாசிகளை வெளியேற்றும் ட்ரம்ப்

நியூயோர்க், ஓக.12

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், வோசிங்டனில் வீதியோரங்களில் வசிப்பவர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுத்துள்ளார் என்று வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அத்துடன் குற்றவாளிகள் எனக் கருதுபவர்களை சிறையில் அடைக்கவும் தீர்மானித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையானது வோஷிங்டனை முன்னர் இருந்ததை விட பாதுகாப்பானதாகவும் அழகாகவும் மாற்றும் என்று ஜனாதிபதி ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார். இந்த நடவடிக்கை மிக விரைவில் செயற்படுத்தப்படும் எனவும் வீதியோரங்களில் வசிப்பவர்களுக்கு வேறு இடங்கள் வழங்கப்படும் என்றும் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார். (ஏ-இ)



## நியூயோர்க்கில் துப்பாக்கிச்சூடு; மூவர் காயம்

நியூயோர்க், ஓக.12

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் புகழ்பெற்ற டைம்ஸ் சதுக்கத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் மூவர் காயமடைந்துள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தை அடுத்து மக்கள் பதற்றமடைந்து சிதறி ஓடியுள்ளனர். பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று காயமடைந்தவர்களை மீட்டு மருத்துவமனையில் சேர்த்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஏ-இ)



## காஸாவை மீட்பதே இஸ்ரேல் இலக்காம்

### பிரதமர் நெதன்யாகு விளக்கம்

ஜெருசலேம், ஓக.12

காஸாவை ஆக்கிரமிப்பது எமது நோக்கமல்ல, அதை விடுவிப்பதே எமது இலக்கு. ஆனால் இஸ்ரேலுக்கு உள்ளேயும் வெளியேயும் சர்வதேச அளவில் பொய் பரப்புரைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

காஸாப் பகுதியில் பொதுமக்கள் கொல்லப்படுதல், சேதம், உதவிப்பொருள்கள் கிடைக்காமை என அனைத்துக்கும் ஹமாஸ் இயக்கம்தான் காரணம். காஸாவில் அடுத்தகட்ட நடவடிக்கைகளை குறுகிய காலத்தில் முன்னெடுப்பட்டுள்ளோம். காஸாவை இராணுவத்தில் இருந்து விடுவித்தல், இஸ்ரேல் இராணுவம் பாதுகாப்பை மேற்கொள்ளுதல், இஸ்ரேல் அல்லாத சிவில் நிர்வாகம் பொறுப்பேற்றல் ஆகியவைதான் எங்கள் இலக்குகள் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஏ-இ)



## துருக்கியில் நிலநடுக்கம் ஒருவர் சாவு; பலர் காயம்

இஸ்தான்புல், ஓக.12

துருக்கியில் 6.1 ரிச்டர் அளவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் ஒருவர் உயிரிழந்துள்ளார். பலர் காயமடைந்துள்ளனர்.

இஸ்தான்புல் மற்றும் சுற்றுலாத் தலமான இஸ்மிர் உட்பட துருக்கியின் மேற்குப் பகுதியில் உள்ள பல நகரங்களில் பூகம்பம் உணரப்பட்டுள்ளது.

இடிபாடுகளுக்குள் சிக்கிய 81 வயதான முதியவர் மீட்கப்பட்ட சிறிது நேரத்தில் உயிரிழந்துள்ளார். 29 பேர் காயமடைந்துள்ளனர். ஆனால் அவர்களின் உடல்நிலை மோசமாக இல்லை. இந்த பூகம்பத்தில் சிந்திர்கி மற்றும் அதை அண்டிய பகுதிகளில் 16 கட்டடங்கள் இடிந்து விழுந்துள்ளன. அவற்றில் நான்கு குடியிருப்புகளும், நகரமையத்தில் உள்ள மூன்று மாடிக் கட்டடங்களும் அடங்கும் என்று துருக்கி உள்விவகார அமைச்சர் அலி யெர்லிகாயா தெரிவித்துள்ளார். (ஏ-இ)



## இஸ்ரேலுக்கான ஆயுத ஏற்றுமதியை நிறுத்திய ஜேர்மனி!

பேர்லின், ஓக.12

ஜேர்மனி இஸ்ரேலுக்கான அனைத்து ஆயுத ஏற்றுமதியையும் நிறுத்தியுள்ளது. காஸா நகரை முழுமையாகக் கைப்பற்றும் திட்டத்துக்கு இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சரவை அனுமதி வழங்கியதைத் தொடர்ந்தே ஜேர்மனி இந்த ஆயுத ஏற்றுமதியை நிறுத்தியுள்ளது.

பொதுமக்களின் உயிரிழப்புகள் அதிகரிப்பதை இதற்கு மேலும் சகித்துக்கொள்ள முடியாது எனத் தெரிவித்துள்ள ஜேர்மனியின் சான்சிலர் காஸா பள்ளத்தாக்கில் மேலும் கடுமையான நடவடிக்கைகளுக்காக இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சரவை வழங்கியுள்ள அனுமதி எவ்வாறு மாற்றம்பெறும் என்று தெரியவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஏ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற்கல்வி வழங்குவது சீர்திருத்தத்தின் நோக்கம்

## பிரதமர் ஹரிணி விளக்கம்

கொழும்பு, ஓக.12

பிள்ளைகளிடம் விழுமியங்களை வளர்ப்பதும், பாடசாலைக் கல்வியை இடைநிறுத்திய பிள்ளைகளை தொழிற்கல்விக்கு வழிநடத்துவதன்மூலம் பொருளாதார வளர்ச்சியில் அவர்களின் பங்களிப்பை உறுதி செய்வதும் கல்விச் சீர்திருத்தத்தின் முக்கியமான நோக்கம் என்று பிரதமரும், கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

2026ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பாக விளக்கமளிக்கும் விசேட கலந்துரையாடலொன்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தலைமையிலான ஆயர்களுடன் கொழும்பு பேராயரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது. அதிலேயே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் பிரதமரும் கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவெவவும் கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பான முழுமையான விளக்கத்தை முன்வைத்தனர்.

இலங்கை ஆயர் பேரவையின் தலைவர் ஆயர் ஹரோல்ட் அந்தோணி உள்ளிட்ட ஆயர்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்குகொண்டனர். (எ-இ)

### ஓய்வூதியம் இரத்து:

# போராட்டத்தில் குதிக்கும் முன்னாள் எம்.பி.க்கள்

கொழும்பு, ஓக.12

ஓய்வூதியத்தை நீக்கும் அரசின் திட்டத்துக்கெதிராக அடுத்தவாரம் முதல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.


இந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்தால் சுமார் 500 நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் முன்னாள் ஓய்வூதியத்தை இழப்பார்கள்.

இந்தநிலையில் அடுத்த வாரம் முதல் இதற்கு எதிராகப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

கடந்தவாரம் இந்தியாவுக்கும் பல சர்வதேச அமைப்புகளுக்கும் இது தொடர்பில் மனுக்களும் கையளிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-75)


## மரண அறிவித்தல்

தோற்றம்
06 . 03 . 1973



மறைவு
09 . 08 . 2025

### தர்மலிங்கம் ஜெயக்குமார் (மகிந்தன்-Jarvis)

யாழ். நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், கனடா Scarborough வை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் ஜெயக்குமார் அவர்கள் கடந்த 09.08.2025 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் கமலநாயகி தம்பதிகளின் ஆசை மகனும், காலஞ்சென்ற வர்களான செல்வராஜா (துரை கராஜ்) திலகவதி தம்பதிகளின் மூத்த மருமகனும், பிரதீபா அவர்களின் ஆருயிர் கணவரும், அஜீன், சுபீன், மனுஸ்ரீ ஆகியோரின் பாசமிகு அப்பாவும், ஜெயவதனி, காலஞ்சென்ற ஜெயசீலன், மாவீரர் ஜெயகரன் (கப்டன் இசையரசன்), ஜெயாநந்தினி, ஜெயசுதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், முருகானந்தம், குமரேசன், சுரேஸ்குமார், விஜிதா, பகீரதி, இந்துகா, சிந்தியா ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற செல்லத்துரை, அன்னபூரணம், லட்சுமி, அம்மாப்பிள்ளை, இரத்தினம் மற்றும் இராஜேஸ்வரி, கோணேஸ்வரி, தனபாலசிங்கம் (சின்னக்கிளி), காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், இராஜேந்திரன் (ராசா) ஆகியோரின் அன்பு மருமகனும், சரண்யா, தரண்யா கஜீவன், பிரவீன், சுஜீனா, சுகஸ்தா, சேரன், யுவன், நேத்ரா ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரியானா, சஜீன், துவானா, றியான், ஸ்ருதி, ஆருதி, கிஷன், கிஷானா, கிருஷ், கிஷாரா, கோஷிகன், நீரஜன், ஆதிரா, செழியன் ஆகியோரின் ஆசைப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.08.2025) புதன்கிழமை கனடாவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் :
துரை கராஜ், நீர்வேலி. குடும்பத்தினர்.

(CS 3822) A

## மரண அறிவித்தல்

### கனகலிங்கம் வினோதினி



யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கனகலிங்கம் வினோதினி அவர்கள் நேற்று (11.09.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-இரத்தினமணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-பாக்கியம் தம்பதியரின் மருமகளும், கனகலிங்கத்தின் அன்பு மனைவியும், பிறேமினி, சபிதாமினி, சியாமினி, சபீகரன், விசாகரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், விவேகானந்தராஜா, ஜெனாயினி ஆகியோரின் அன்பு மாமியாரும், ரிஷிகா, அக்ஷயன், கஸ்வின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான இரவீந்திரன், மகேந்திரன், ஸ்ரீதரன், சாந்தினி, மாலினி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சாரதாமணி, குமணேஸ்வரி, பத்மநாதன், ரங்கநாதன், இராசமணி, கனகம்மா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.08.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக நண்பகல் 12.00 மணியளவில் வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பிறப்பு 02.02.1948 — இறப்பு 11.0[illegible].2025

50/24,
வைரவர் கோவில் ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவப் பிரசன்னத்துக்கு எதிரான

# ஹர்த்தாலுக்கு பூரண ஆதரவு!

## மலையகத் தலைவர்கள் அறிவிப்பு

கொழும்பு, ஓக. 12

வடக்கு - கிழக்கில் காணப்படும் அளவுக்கு அதிகமான இராணுவப் பிரசன்னத்துக்கு எதிராக அறிவிக்கப்பட்டுள்ள முழு அமைப்புப் போராட்டத்துக்கு பூரண ஆதரவை வழங்குவதாக மலையகக் கட்சிகள் அறிவித்துள்ளன.

மலையகத்தின் பிரதான கட்சிகளான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணி ஆகியனவே ஹர்த்தாலுக்குத் தமது ஆதரவை அறிவித்துள்ளன.

இது தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

முத்து ஐயன்கட்டு குளத்தில் இளம் குடும்பத்தலைவர் சடலமாக மீட்கப்பட்ட விவகாரத்தில், முத்து ஐயன்கட்டு இராணுவ முகாமுக்குள் என்ன நடந்தது என்பதை ஊகிப்பது கடினமானது அல்ல. எனவே, இந்தச் சம்பவத்தை அடிப்படையாக வைத்து, இராணுவப் பிரசன்னத்தைக் குறைக்கக்கோரியும், இராணுவ அடக்குமுறைகளுக்கு எதிராக நீதியான விசாரணை கோரியும் அறிவிக்கப்பட்டுள்ள முழு அடைப்புப் போராட்டத்துக்கு எமது ஆதரவைத் தெரிவித்துள்ளோம். அரச இராணுவ பயங்கரவாதத்தை, நாம் அப்போதும் எதிர்த்தோம். இப்போதும் எதிர்கிறோம். எப்போதும் எதிர்ப்போம் - என்றுள்ளது. (அ-ம-44)

### நேற்று...

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/351 கிராம அலுவலர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஐவரும், ஜே/363 கிராம அலுவலர் பிரிவில் ஒரு குடும்பத்தைச்சேர்ந்த 7 பேரும், ஜே/364 கிராம அலுவலர் பிரிவில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 18 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/393 கிராம அலுவலர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த இருவரும் பாதிக்கப்பட்டுள்ளனர். (அ-ம-26)

### வடக்கு...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மண்ணையும் மக்களையும் மீட்கவே, ஆயுதப் போராட்டமும், அகிம்சை வழிப் போராட்டமும் இந்த மண்ணில் இடம்பெற்றன. இன்று மன்னார் மண் பெரும் ஆபத்துக்குள் தள்ளப்பட்டுள்ளது. மன்னாரில், இரண்டாம்கட்ட காற்றாலைக் கோபுரங்கள் அமைப்பதற்கு எதிராகவும், கனிம அகழ்வுக்கு எதிராகவும் மக்கள் கடந்த பத்து நாள்களுக்கும் மேலாகப் போராடிவரும் நிலையில், இந்தப் போராட்டத்தை அடுத்த கட்டத்துக்குக் கொண்டுசெல்லவேண்டிய தேவை உள்ளது.

எனவே, எதிர்வரும் 14ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி முதல் மன்னார் பஜார் பகுதியில் வடக்கு - கிழக்கு ரீதியாக மக்களைத் திரட்டிப் பெரும் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம். 'எமது நிலம் எமக்கு வேண்டும்' எனும் தொனிப்பொருளில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

மன்னார் இன்று எதிர்கொண்டுள்ள பிரச்சினை, மன்னாருக்கு மட்டுமான பிரச்சினையல்ல. இது ஒட்டுமொத்த தாயகத்துக்குமான பிரச்சினை. எனவே, இதில் ஏனைய மாவட்டங்களின் மக்களும், அரசியற் தலைவர்களும் கலந்து கொள்ளவேண்டும். தென்னிலங்கைக்கு நாங்கள் பாடம் புகட்டும் வகையில் எமது மண்ணையும் மக்களையும் காப்பற்றும் வகையில் இந்தப் போராட்டம் இடம்பெறும் - என்றார். (அ-ம-56)

### ரியூஷன்...

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். அவரின் இறப்புக்கான காரணங்கள் தெரியவராத நிலையில், இந்தச் சம்பவம் வவுனியாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் உள்ள தனியார் கல்வி நிலையம் ஒன்றில் உயர்தர வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கு காலையில் இருந்து மதியம் 12 மணிவரை வகுப்பு நடைபெற்றுள்ளது. குறித்த வகுப்பில் கலந்து கொண்ட மாணவி, நீண்டநேரமாக வீடு திரும்பாததைத் தொடர்ந்து அவரை பெற்றோரும் உறவினர்களும் தேடிச் சென்றுள்ளனர்.

இதன்போது, குறித்த மாணவியின் புத்தகப்பை, சைக்கிள் என்பன மாணவி கல்வி பயின்ற தனியார் கல்வி நிலையத்தில் காணப்பட்டதுடன், கல்வி நிலைய வளாக கிணற்றின் அருகே மாணவியின் பாதணிகளும் காணப்பட்டுள்ளன. கிணறு 40 அடிக்கும் மேற்பட்ட ஆளம் உள்ளது என்பதுடன், கிணற்றுக்குள் அதிகளவான தண்ணீர் நின்றதால், மாணவியின் நிலை தொடர்பில் உறுதியாக எதையும் அறியமுடியாத சூழல் நிலவியுள்ளது.

இதனையடுத்து, பெற்றோர் மற்றும் கல்வி நிலைய நிர்வாகத்தினர் வவுனியா பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர். சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸாரும், தகவலறிந்து வந்த இளைஞர்களும் மீட்பு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தியுள்ளனர். இதன்போது கிணற்றின் அடிப்பகுதியில் மாணவி மூழ்கியிருப்பது அவதானிக்கப்பட்டு, அவர் உடனடியாக மீட்கப்பட்டார்.

எனினும், அவர் முன்னதாகவே உயிரிழந்துவிட்டமை [illegible] தைத் தொடர்ந்து, சடலம் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டது. வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (அ-ம-110-18)

### போதை...

பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமையவே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-20)

### 280 கிலோ...

இடமான முறையில் பயணித்த இருவரை இடைமறித்துச் சோதனையிட்ட போதே அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரும் யாழ்ப்பாணம் - குருநகரைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸாரின் விசாரணையின் போது தெரியவந்துள்ளது. அவர்கள் மேலதிக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (அ-ம-26)

### மண்கும்பான்...

பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவல்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட மேலதிக நடவடிக்கைகளுக்கு அமையவே இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட சடலம் பகுதியளவில் உருக்குலைந்த நிலையில் காணப்படுகின்றது என்றும், ஓரிரு தினங்களுக்கு முன்னர் அவர் உயிரிழந்திருக்கலாம் என்றும் பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்டவரின் பெயர் விவரங்கள் தெரியவராத நிலையில், மேலதிகவிசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. புங்குடுதீவில் கடந்த வாரம் ஆள்களற்ற நிலையில் படகொன்று மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26-66)

### வயோதிபப்...

விஜயரத்தினம் சரஸ்வதி (வயது-68) என்ற மூதாட்டியே இவ்வாறு கொல்லப்பட்டவராவார். வீட்டில் தனிமையில் இருந்தபோதே இனந்தெரியாத நபர்களால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. படுகொலையின் பின்னணி தொடர்பில் தெரியவராத நிலையில், மேலதிக விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-113)

### உயிரிழந்த...

அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நேற்று இறுதிச் சடங்குகள் இடம்பெற்றன.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முத்து ஐயன்கட்டுப் பகுதியில் உள்ள இராணுவ முகாமுக்குச் சென்ற இளைஞர்கள் மீது இராணுவத்தினர் கொலைவெறித் தாக்குதல் நடத்தியிருந்தனர். இராணுவத்திடம் இருந்து தப்பிப்பதற்காக இளைஞர்கள் முத்து ஐயன்கட்டு குளத்தில் குதித்த நிலையில், அவர்களில் ஒருவர் உயிரிழந்திருந்தார். அவரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைகளைத் தொடர்ந்து உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்தே, நேற்று அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, சடலம் அடக்கம் செய்யப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிவஞானம் சிறீதரன், துரைராசா ரவிகரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், நூற்றுக்கணக்கான பொதுமக்கள் எனப் பலரும் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டனர்.

இறுதிச் சடங்கை முன்னிட்டு பொலிஸ் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-35)

### வெளியக...

ஊடகப் பேச்சாளர் சஞ்ஜீவ எதிரிமன்ன கலந்துகொண்டார். அவரிடம் பிரதமர் பதவி தொடர்பில் கேட்கப்பட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

'பிரதமர் பதவியில் மாற்றத்தை ஏற்படுத்தும் முடிவுக்கு அரசாங்கம் செல்லாது. சில விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும் மாற்றம் நிகழாது. ஏனெனில் வெளியக அழுத்தத்தின் பிரகாரம் வழங்கப்பட்ட நியமனம் அது' என்று எதிரிமன்ன மேலும் கூறியுள்ளார். (அ-ம-44)

### ஓகஸ்ட்...

பகுதியில் இந்தப் புத்தகத் திருவிழா இடம்பெறவுள்ளது. உள்ளூரிலும், தேசிய மற்றும் சர்வதேச அளவிலும் உள்ள புத்தக வெளியீட்டாளர்கள் மற்றும் விற்பனையாளர்களை ஒன்றிணைத்து இந்தப் புத்தகத் திருவிழாவை நடத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (அ-ம)

### அல்லாரையில்...

ளார். வெற்றிவேலு கந்தையா (வயது-77) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். முதியவரின் வீட்டுக்கு அருகாகவே நேற்றுமுன்தினம் இந்த விபத்துச் சம்பவித்துள்ளது. காயமடைந்த முதியவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நிலையில், நேற்று உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

### பற்றியது...

வட்டுக்கோட்டை - மூளாய் பகுதியைச் சேர்ந்த, சாரங்கன் துளசிமலர் (வயது-75) என்ற மூதாட்டியே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடந்த 7ஆம் திகதி தீக்காயங்களுக்கு உள்ளான அவர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், மேலதிக சிகிச்சையின்போது உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றாலைத் திட்டத்தை மன்னாரில் நிறுத்துங்கள்

## வவுனியாவில் மனிதச்சங்கிலிப் போராட்டம்!

**வவுனியா, ஓக.12**

**மன்னாரில் முன்னெடுக்கவுள்ள காற்றாலைத் திட்டத்தை நிறுத்தக்கோரியும், இல்மனைட் அகழ்வுக்கு எதிராகவும் மன்னாரில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற சத்தியாக்கிரகப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து வவுனியாவில் மனிதச்சங்கிலிப் போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.**

வவுனியா மருத்துவமனை சுற்றுவட்டத்துக்கு அண்மையில் குறித்த போராட்டம் நடைபெற்றது.

போராட்டத்தில் பங்கேற்றவர்கள் தெரிவித்ததாவது:- அபிவிருத்தியின் பெயரால் மக் களின் வாழ்வுரிமையைப் பறிக்கும் இந்தத் திட்டங்களை உடன் நிறுத்தவேண்டும். இலங்கையின் மீன்பிடித் தொழில் மற்றும் பறவைகளின் பாதுகாப்பு சரணாலயம், இயற்கைக்காற்றின் வலு முதலானவற்றுக்கு பெயர் பெற்ற இடமாக மன்னார் விளங்குகிறது.

தற்போது ஏகபோக இராட்சத பல்தேசியக் கம்பெனிகளின் இலாப வேட்டையாலும், இலங்கை அரசாங்கங்களின் கையாலாகாத நிலையாலும் அழிவை எதிர்நோக்கியுள்ளது மன்னார்த் தீவு.

காற்றாலைகளின் அமைப்பால் தரையில் ஏற்படுத்தப்பட்ட மாறுதல்கள் வடிகாலமைப்பை மாற்றி வெள்ளப்பெருக்கு மற்றும் நிலத்தடி நீர் உவராதலை ஏற்படுத்துகிறது. அத்துடன் மன்னார் மண்ணின் கீழ் இருக்கும் இல்மனைட் போன்ற கனிம வளங்கள் இன்றைய நவீன விஞ்ஞான உபகரணங்கள் மற்றும் இராணுவத் தேவைகளுக்காக உலக



நாடுகளுக்குத் தேவைப்படுகின்றன. அதில் முதலீடு செய்வது பெரும் இலாபம் தரும் என்பதால் பல்தேசிய நிறுவனங்கள் முண்டியடிக்கின்றன.

இந்தக் காற்றாலை மற்றும் கனிய அகழ்வு நாட்டின் தேவைக்கானதன்றி பல்தேசியக் கம்பெனிகளின் இலாபக் குவிப்புக்கானதே. எனவே இதனை உடன் நிறுத்தி மன்னாரின் வளங்களைப் பாதுகாக்க வேண்டும் - என்றனர். (ச-110)

**சாரதி தேவை**

தாவடி, கொக்குவிலில் இயங்கிவரும் பிரபல்யமான அரிசியாலை ஒன்றிற்கு சாரதி தேவை. (பாரவூர்தி சாரதி)

**076 096 9728**

(CS/57776) J-1

**வேலைவாய்ப்புகள்**

| | |
|---|---|
| Graphic Designer | : 0776216741 |
| தச்சு வேலை செய்பவர்கள் | : 0773580547 |
| 3D Visualizer | : 0773580547 |
| Juice Maker | : 0760709751 |
| Branch Manager | : 0779812015 |
| Delivery Rider | : 0773501095 |
| தையலாளர்கள் | : 0776088262 |
| Accountant | : 0776178274 |
| Business Development Executive | : 0777790111 |
| கால்நடை வைத்திய உதவியாளர் | : 0743344450 |
| Food city work | : 0742155253 |
| Clerk | : 0755489898 |
| Driver | : 0776529583 |
| விற்பனையாளர்கள் | : 0752589665 |
| Sales Manager (Basic 90,000) | : 0779969661 |

வேலைவாய்ப்பு வட்சப் குருப்பில் இணைய மற்றும் மேலதிக வேலைவாய்ப்புகளுக்கு: dewmasweb.com

வேலையாட்கள் தேவையா : 0741383368

DEWMAS, 51, Amman Road, Nallur

# மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 06 . 1951



மறைவு 11 . 08 . 2025

**அமிர்தகுமாரி சந்திரகாந்தன்**

**(ஓய்வுபெற்ற உதவி முகாமையாளர், மக்கள் வங்கி)**

கல்லூரி வீதி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமிர்தகுமாரி சந்திரகாந்தன் (ஓய்வுபெற்ற உதவி முகாமையாளர், மக்கள் வங்கி) அவர்கள் கடந்த (11.08.2025) திங்கட்கிழமை பருத்தித்துறையில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற தில்லைநாயகம் - கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற காசுபதி - சந்தனப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் சந்திரகாந்தன் (ஓய்வுபெற்ற முகாமையாளர், மக்கள் வங்கி) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற மேதினிகுமாரி, சுப்ரமணியம் அவர்களின் அன்புச் சகோதரியும், அங்கவை (ஆசிரியர் - புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி) அவர்களின் அன்புத் தாயாரும், புவிராஜ் (NDB வங்கி, வவுனியா) அவர்களின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.08.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பருத்தித்துறை, சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல் :**

**சந்திரகாந்தன் (கணவர்) - 077 076 0717**

**புவிராஜ் (மருமகன்) - 076 767 7431**

**கல்லூரி வீதி, பருத்தித்துறை.**

(CR/45777) J-1

## ஒட்டுசுட்டானில்

# அடாவடிசெய்த பொலிஸ் வெலிஓயாவுக்கு இடமாற்றம்

முல்லைத்தீவு, ஓக.12

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் மக்களுடன் அடாவடித்தனமாகச் செயற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் அடாவடித்தனமாகச் செயற்படுகிறார் எனப் பொதுமக்கள் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் முறையிட்டுள்ளனர்.

அதற்கமைய குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்மீது நடவடிக்கை எடுக்குமாறும் எடுக்கத்தவறினால் எதிர்வரும் சனிக்கிழமை ஒட்டுசுட்டான் பொலிஸ்நிலையத்துக்கு முன்பாக மக்களோடு இணைந்து போராட்டம் மேற்கொள்



வோம் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் ஒட்டுசுட்டான் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரியிடம் எச்சரித்தார். இந்தநிலையில் குறித்த அத்துமீறல் செயற்பாட்டில் ஈடுபட்டுவந்த குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் வெலி ஓயாப் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்று ஒட்டுசுட்டான் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

(ச-246,26)

## தீயில் சிறுவன் உயிரிழப்பு:

# பெற்றோர் உட்பட மூவர் கைது

கொழும்பு, ஓக.12

இரத்தினபுரி மஹவத்தப் பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் கடந்த சனிக்கிழமை அதிகாலை ஏற்பட்ட தீப்பரவலில் சிறுவன் ஒருவன் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் தாய், தந்தை உட்பட மூவர் கைதுசெய்யப்பட்டு எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை அதிகாலை ஏற்பட்ட தீப்பரவலின்போது வீட்டிலிருந்த 7 வயதுடைய சிறுவன் ஒருவன் காயமடைந்து பலாங்கொடை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் என்பது குறிப்பி டத்தக்கது. (ச-இ)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org